செ.வெ.எண்:22 நாள்:08.02.2017

# <u>பத்திரிக்கைச்செய்தி</u>

எப்பொருளும் வேண்டாதோருக்கு வழங்கப்பட்டுள்ள வெள்ளை நிறமுடைய “N” குடும்ப அட்டைகளை 2017–ம் ஆண்டுக்கு புதுப்பித்துக் கொள்வதற்கு ஏதுவாக கீழ்க்கண்ட இணையதள முகவரியில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இணையதள முகவரி : www.tnpds.com ஆகும்.

குடும்ப அட்டைதாரர்கள் சம்பந்தப்பட்ட நியாயவிலைக் கடையில் உள்ள விற்பனை முனையத்தில் (POINT OF SALES DEVICE) தங்களது N குடும்ப அட்டையை பதிவு செய்து கொள்ள வேண்டும். N குடும்ப அட்டைதாரர்கள் www.tnpds.com என்ற இணையதள முகவரியின் முகப்பில் <u>பயனுள்ள இணைப்புகள்</u> என்ற தலைப்பின் கீழ் காணப்படும் N கார்டு புதுப்பித்தல் தாள் (N card renewal slip) என்ற இணைப்பில் N குடும்ப அட்டையை பதிவு செய்த பின்னர் N குடும்ப அட்டை 01.01.2017 முதல் 31.12.2017 வரை புதுப்பிக்கப்பட்டுள்ளது என்ற சீட்டு அச்சிட்டு பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த புதுப்பித்தல் ஒப்புகை சீட்டினை “N” குடும்ப அட்டைதாரர்கள் தங்களுடைய குடும்ப அட்டையில் ஒட்டி பராமரிக்கப்பட வேண்டும். இத்தகைய காலநீட்டிப்பு பதிவுச் சீட்டு ஒட்டப்பட்டுள்ள குடும்ப அட்டைகள் தான் நடைமுறையிலுள்ள குடும்ப அட்டைகளாக கருதப்படும் என கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.கோவிந்தராஜ்.,இ.ஆ.ப., தெரிவிக்கிறார்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
கரூர்.